# இயேசு அடிக்கடி வீடுகளை சந்தித்தார்

(குழந்தைகளுக்கு போதிப்பவர்கள் பிள்ளைகளுக்கான பாடம் V2b யைப் பயன்படுத்தவும்)

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, நீர் எங்கள் மத்தியில் வாழவும், எங்களை வீடுகளில் சந்திக்கவுமே வந்தீர். அந்த வகையில், நீர் எங்களிடம் அன்பு காட்டி எங்களுக்கு இரட்சிப்பைக் கொண்டு வந்தீர். அநேக மக்கள் உம்மை அறிந்து கொள்ளவில்லை; ஏற்றுக் கொள்ளவும் இல்லை. நீர் யார் என்பதை அறிய எங்கள் கண்களைத் திறந்ததற்காய் நன்றி. உமது பிரசன்னம் தேவைப்படுகிற மக்களின் வீடுகளுக்கு உமது நற்செய்தி எடுத்துச் செல்ல எங்களுக்கு உதவும்."

1. **ஜெபத்தின் மூலமும், இயேசுவின் முன் மாதிரிகளை படிப்பதின் மூலமும் உங்கள் மனதை ஆயத்தப்படுத்துங்கள்.**

எவ்வாறு சகேயுவுக்கும் அவனது குடும்பத்துக்கும் இரட்சிப்பு வந்தது என்பதை லூக்கா 19:1-10ல் காண்க (பதில் தொடர்ந்து வருகிறது).

- இயேசுவிடமும், அவரது பிரசங்கத்தின் மேலும் சகேயு எவ்வாறு தன் விருப்பத்தைக் காட்டுகிறான்? [3-ம் வசனம் பார்க்க]
- சகேயுவுக்கு தனது அன்பையும், மன்னிப்பையும் இயேசு எவ்விதம் காட்டுகிறார்? [5-ம் வசனம்]
- இயேசு சகேயுவிடம் கூறிய வார்த்தைகளைக் கேட்டு ஏன் எல்லோரும் ஆச்சரியம் அடைந்தனர்? [வசனம் 7]
- தனது மனந்திரும்புதலையும், நன்றியுணர்வையும் சகேயு எவ்வாறு காட்டினான்? [வசனம் 8]
- இயேசு ஏன் சகேயுவை அவன் வீட்டில் சந்தித்தார் [வசனம் 10]

கொர்நேலியுவுக்கும் அவனது குடும்பத்துக்கும் அவனது பல நண்பர்களுக்கும் எவ்வாறு இரட்சிப்பு வந்தது என்பதை அப். 10 ஆம் அதிகாரத்தில் காண்க:

- யூத பாரம்பரியத்தைப் பின்பற்றாத மக்களை சந்திக்க பேதுருவை தேவன் எவ்வாறு ஆயத்தப்படுத்தினார் (வசனம் 9-16).
- கொர்நேலியுவை சந்திக்கப் புறப்பட்ட பேதுருவுடன் சென்றது யார்? (வசனம் 23).
- கொர்நேலியுவின் வீட்டில் பேதுருவுக்காகக் காத்திருந்தது யார் (வசனம் 24).
- தனது பிரசங்கத்தை ஆரம்பிக்கு முன் பேதுரு என்ன செய்தான்? (வசனம் 29)
- இயேசுவைப் பற்றி பேதுரு கூறிய விஷயங்கள் என்ன? (வசனம் 38-43)
- தனது குடும்பத்துடனும் நண்பர்களுடனும் கொர்நேலியு எவ்வளவு சீக்கிரமாக ஞானஸ்நானம் பெற்றான் (வசனம் 47-48)
- புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்த பின் பேதுருவும் யோப்பாவில் இருந்து வந்த அவனுடைய உதவியாளர்களும் என்ன செய்தார்கள்? (வசனம் 48)

வீடுகள் சந்திப்பதின் இன்னொரு நோக்கம் பற்றி அப். 9:32-43 பார்க்க

**2. இந்த வாரத்தின் செயல்பாடுகள் குறித்து உங்கள் உதவியாளர்களுடன் கலந்து திட்டமிடவும்.**

சபை மக்களின் வீடுகளை சந்திக்கும் திட்டங்களை தீட்டுங்கள். மற்றவர்களையும் கூட்டிச் செல்லுங்கள். உங்கள் உதாரணங்கள் மூலம் அவர்கள் கற்றுக்கொள்வார்கள். ஒவ்வொரு குடும்பங்களும் முறையாக வீடு சந்திப்பைப் பெற மற்ற சபை உறுப்பினர்களையும் ஆயத்தப்படுத்தவும்.




இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறியாத நண்பர்களையும் குடும்பங்களையும் சந்தித்து கிறிஸ்துவைப் பற்றிக் கூற திட்டமிடுங்கள். மற்றவர்களையும் கூட்டிச் செல்லவும். அல்லது அவர்களுடைய நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீட்டுக்குச் செல்லலாம். இதன் மூலம் உங்கள் முன் உதாரணத்தை அவர்கள் கற்றுக் கொள்வார்கள். புதிய கிறிஸ்தவர்கள் இயேசுவைப் பற்றியும், அவர் அவர்களுக்கு செய்தது பற்றியும், தங்கள் நண்பர்களுக்கும் குடும்பத்துக்கும் கூற சாட்சியை தயாரிக்க உதவுங்கள்.

**3. வரும் ஆராதனைக்காக உடன் உதவியாளர்களுடன் திட்டமிடுங்கள்**

தற்போதைய தேவைகளுக்கும் வட்டார பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ற செயல்பாட்டை தெரிந்து கொள்ளவும்.

கொர்நேலியுவின் வீட்டுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் சென்ற பேதுருவின் குழுவினரைப் பற்றிய செய்தியைச் சொல்லலாம் அல்லது நடிக்கலாம்.

பகுதி I ல் நீங்கள் காணும் விஷயங்களைப் பற்றி கேள்விகள் கேட்கவும்

**விவரிக்கவும் :**

- ஒருவருடைய வீடுகளுக்கு ஒருவர் சென்று உற்சாகப்படுத்தி ஜெபிக்க வேண்டும்
- பொதுவாக தனியாக அல்ல, இருவராகவோ ஒரு குழுவாகவோ செல்ல வேண்டும்.
- வதந்திகளைத் தவிர்க்க, ஓர் ஆண், ஒரு பெண் தனியாக இருக்கும் போது, அவரது வீட்டிற்கு செல்லக் கூடாது.

உற்சாகமூட்டவும், பிணியாளிகளுக்காக ஜெபிக்கவும் பேதுரு விசுவாசிகளின் வீட்டுக்கு சென்றார். ஒரு கிறிஸ்துவுக்குள்ளான சகோதரியை மரித்தோரில் இருந்து எழுப்ப தேவன் அவரை பயன்படுத்தினார்.

பேதுரு கொர்நேலியுவின் வீட்டுக்கு சென்றது போல, இயேசுவை அறியாதவர்கள் வீட்டுக்கு நாமும் செல்ல வேண்டும். இயேசுவைப் பற்றிய ஓர் எளிய பிரசங்கத்தைப் பேதுரு கொர்நேலியுவுக்குக் கொடுத்தார். இயேசுவை அறியாதவர்கள் வீட்டுக்கு செல்லும்போது நாமும் அதே செய்தியை உபயோகப்படுத்தலாம்.

இயேசுவைப் பற்றி பேதுரு கூறிய முக்கியமான விஷயங்கள் இதோ:

அவரைப் பற்றி மக்களும் அறிந்து கொண்டு இரட்சிக்கப்படவே தேவன் விரும்புகிறார். வசனம் 34-

நன்மை செய்யவும், நோயாளிகளைக் குணப்படுத்தவும், பிசாசுகள் பிடித்த யாவரையும் குணமாக்கவும், தேவன் இயேசுவை பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் செய்தார் (வசனம் 37-38).

இயேசுவின் மரணத்தையும், அடக்கத்தையும், உயிர்த்தெழுந்த பின் தோற்றம் அளித்ததையும் மக்கள் பார்த்தனர் (வசனம் 39-41).

தீர்க்கதரிசிகள் முன் அறிவித்தது போல இயேசு அவரது நாமத்தினால் பாவ மன்னிப்பை அருளுகிறார் (வசனம் 43).

எல்லோரோடும் நற்செய்தியை பகிர்ந்து கொள்ள இயேசு நமக்குக் கட்டளை தருகிறார் (வசனம் 42)

**1 பேதுரு 4:8-9 ஐ வாசிக்கவும் :** உபசரிப்பவர்களை தேவன் ஆசீர்வதிக்கிறார் என்பதை விளக்கவும்

கர்த்தரின் பந்திக்கு ஆரம்பமாக, லூக்கா 7:36-50 ல் வரும் இயேசுவின் பாதத்தைத் தன் கண்ணீரால் கழுவிய பெண்ணைப் பற்றி வாசிக்கவும். இயேசுவின் பிரசன்னத்தில் வரும்போது பரிசுத்த ஆவியானவர் நமது குற்றங்களை நமக்கு உணர்த்துகிறார் என்பதை விளக்கவும். நாம் நமது பாவங்களை அறிக்கை இடவும், தேவனுடைய மன்னிப்பு எவ்வளவு பெரிது என்பதை நினைவு கூறவும் நாம் நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும். நமது பாவங்களை எவ்வளவு தூரத்திற்கு உணருகிறோமோ, அவ்வளவு தூரத்திற்கு அவரது மாபெரும் இரக்கத்தைக் குறித்த நன்றியுணர்வையும் அன்பையும் நாம் உணர்வோம்.

குழந்தைகள் தாங்கள் ஆயத்தம் செய்த நாடகம், கவிதை, கேள்விகள் ஆகியவற்றை சபையில் அரங்கேற்றட்டும்.

தங்கள் வீடுகளில் பிறருக்காக சேவை செய்ய தேவன் எவ்விதம் அவர்களை உபயோகித்தார் என்பதையும், பிற விசுவாசிகளை உபசரித்தபோது தேவன் எவ்வாறு அவர்களை ஆசீர்வதித்தார் என்பதையும் விசுவாசிகள் சாட்சியாக அல்லது அறிக்கையாகக் கூற வேண்டவும்.

ஒருவருக்கொருவர் ஆலோசனை கூறவும், வீடுகளுக்கு சென்று ஒருவரை ஒருவர் சந்திக்கவும், அவிசுவாசிகளை சந்திக்கவும், ஜெபிக்கவும் போட்ட திட்டங்களை உறுதி செய்ய இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட குழுக்களை அமைக்கவும்.

யோவான் 1:14 ஐ மனப்பாடம் செய்க

Copyright © 2003 by Paul-Timothy Trainers. Download Paul-Timothy studies freely from www.Paul-Timothy.net